ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

நமது பரமாசாரியாளின் பரமோபதேசம்.

சென்ற 9-உ யன்று நமது பரமாசார்யாள் மைலாப்பூரில் செய்த "சங்கரவிஜய" பிரசங்கத்தின் கடைசி பாகத்தில், ஸபையோர்களின் ச்ரேயோபிவிருத்திக்கான சில அனுஷ்டான முறைகளை உபதேசஞ் செய்திருக்கிறார்கள்.

அதாவது:—

"இதுவரையில்சங்கர விஜயத்தைக்கேட்டுவந்திருக்கிற நீங்கள் சில காரியங்களைச் செய்யவேண்டும். பிரதி ஞாயிற்றுக்கிழமையிலுமாவது, காயத்ரீ 1000 முறை ஜபிக்கவேண்டும். ஏகாதசீ விருதம்இருக்கவேண்டும். தினமும் ஸாயங்காலத்தில் ஸந்தியாவந்தனத்தைச் செய்துவிட்டுத் தனியாக உட்கார்ந்துகொண்டு, சிறிதுநேரம் பகவானைத் தியானம் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் நமது ஆசார்யாள் படம் ஒன்றையும், பாதுகையையும், வைத்துக்கொண்டு நமஸ்கரிக்கவேண்டும். வருஷத்தில் ஒரு முறை ஆசார்ய ஜயந்தீ தினத்தில் பாதுகைக்குப் பூஜை செய்து இரண்டொரு பிராம்மணர்களுக்கு அன்னமிடவேண்டும். பிறகு பலர் சேர்ந்து ஜயந்தீ கொண்டாடுமிடத்திற்குப் போய் அதில் கலந்து கொள்ளவேண்டும். ஸ்தோத்திரங்களைப் பாடம் பண்ணி ஆனந்தம் அடையவேணடும்" சுபம் !

இதனை ஆர்யதர்மாபிமானிகளனைவரும் அனுதினமும், அனுஸந்தானம் செய்து அனுஷ்டிக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். இது தான் கலி பாப பரிஹார மார்க்கமாகும்.

V. J. S.

ஸநாதநிகளுக்குப் பதிலாகுமா?

காந்திஜி, தமது 7-வது அறிக்கையில் ஸனாதனிகளின் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிற விஷயம் பத்திரிகாபிமானிகளுக்குத் தெரிந்ததேயாகும். யாவரும் ஏக மனதாக ஸமாதானத்துடன் அங்கீகரிக்கத் தக்க நிலையில் அமைந்துள்ள அவருடைய பதிலில் கவனிக்கத்தக்க அநேக விஷயமுண்டு. அவ்விஷயங்களில் சிலவற்றை மாத்திரம் ஸநாதனிகளிடம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதனால் பெருத்த தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் ஸநாதனிகளுக்குஞ் சீர்திருத்தக்காரர்களின் அபிப்பிராயம் விசதமாவதால் ஏதாவது ஒரு முடிவு யோசனை செய்துகொள்ள இடமேற்படுவதுடன் பிடிவாதமற்ற சீர்திருத்தக்காரர்களும் தமது சீர்திருத்தத்தை மாற்றிக்கொள்வதற்கும் அவகாசமேற்படலாம் என்பது என் அபிப்பிராயம்.

அவரவர் இஷ்டப்படி நடப்பதற்கு விரோதமாக நடக்கும்படி நான் (காந்திஜீ) கட்டாயப்படுத்தவில்லையா? என்ற முதல் கேள்வுக்கு காந்திஜீ பதில் சொல்லுகையில் "நான் அப்படிக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை" என்று முதலில் சொல்லிவிட்டு முடிவில் "நான் உத்தேசிக்காத எந்தப் பலனாவது என் உபவாசத்தாலேற்படுமாயின் மீண்டும் நான் உபவாஸத்தில் இறங்கவேண்டியதுதான். அப்படி உபவாசமிருப்பதும் நாணயமாகுமென்பது தவிர என்னிடம் நம்பிக்கையுள்ள பல ஜனங்களை பிரஸ்தாப திருத்த இயக்கத்திற்குத் தகுந்த யத்தினம் செய்யும்படி அது தூண்டும். மத ஸம்பந்தமான இவ்வியக்கத்திலும் இது கோக்கக்கூடும்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தப் பதிலிலிருந்து "நான் நோக ஸனாதனிகளைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை, ஆனால் என்னைப் பின்பற்றி நடப்பவர்

களால் ஸநாதனிகளுக்குத் தொந்தரவு ஏற்படும்படி செய்ய நான் என் உபவாஸத்தை ஒரு தூண்டுகோலாக வைத்துக்கொண்டு இருக்கிறேன்'' என்று ஏற்படவில்லையா?

இன்னொருவிடத்தில் காந்திஜீ "பின்னுடி ஏதோ வரப்போகிற தென்று தியானம் செய்துகொண்டு ஸநாதனிகள் பயப்படவேண்டியதில்லை," என்று சொல்லியிருக்கிறார். இவற்றால் பயப்படுகின்ற ஸநாதனிகள் சீர்திருத்தக்காரர்களிடமுள்ள பயத்தை எவ்வாறு அப்புறப்படுத்திக்கொள்ளக்கூடும்?

தவிர, தமது உபவாஸம் நாணயமென்பதும் எப்படி? என்பதை விருப்பமிருந்தால் காந்திஜி ஸநாதனிகளுக்குத் தெளிவு படுத்திக்கூறவேண்டும். இன்றேல் அவ் வுபவாஸம் பிறரை நோகவோ, மறைவாகவோ, கட்டாயப்படுத்தவே தான் ஏற்பட்டதாக ஒப்புக்கொள்ளநேரிடும். "இது பலாத்கார முறையல்ல" வென்று காந்திஜி எவ்வளவு சொன்னாலும் அது ஒப்புக்கொள்ளக் கூடியதாகுமா? ஆகவே கட்டாயப்படுத்தவில்லையா வென்ற முதல் கேழ்விக்கு காந்திஜி கட்டாயப்படுத்தவே செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டதாகத்தான் ஏற்படுகின்றது. அது சரியல்ல வென்று ஸநாதனிகள் இவரிடம்பிரார்த்தித்துகொள்வது நியாயமே!

இரண்டாவது கேள்வியின் பதிலில் "ஸநாதனிகளுக்கும், சீர்திருத்தக்காரர்களுக்கும் சாச்வதமாக விட்டுப்போய்விடுமென்று நான் பயப்படவேயில்லை' என்று காந்திஜீ ஸாமாஸ்யம் செய்திருக்கிறார்.

எத்தனையோ சீர்திருத்த ஸமாஜங்கள் நம்மிந்தியாவில் அடிக்கடி நீர் குமிழிபோல் உண்டாகி உண்டாகி நசித்துவிட்டன. இனியுமவ்விதம் நசிக்கப்போகின்றன. ஏன்? அவை பிரமாண பலமற்றவையல்லவா? சீர்திருத்தக்காரர்களுக்கு ஆள் பலம் பண பலம், செல்வாக்கு பலம், புத்தி பலம், எவ்வளவு இருந்தபோதிலும் இவையெல்லாம் பிரமாண பலமுள்ள எங்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுமோ?

இதுகாறுமேற்பட்ட சீர்திருத்த சங்கங்களிலிருந்து தப்பிப் பிழைத்து வந்த சில ஸநாதனிகள் இப்போதைய சீர்திருத்த சங்கங்களிலிருந்தும் தப்பிப் பிழைத்துக் கலி முடிவு வரையில் உயிரு

டன் வாழ்வார்கள் என்றே திட நம்பிக்கையுடன் உறுதி மொழி கூறுவேன்.

நவீன சீர்திருத்தத்தின் இயல்பு எவ்விதம் என்பது காந்தீஜீக்கு அனுபவ ஸித்தமேயொழிய புதிதல்ல. "எத்தனையோ இயக்கங்களில் தலைமையை வஹித்திருப்பதாக அவரே சொல்லியிருக்கிறார். அவையெல்லாம் இப்போது மறைந்துவிடவில்லையா? அவைகட்கு என் அப்படி நேரவேண்டும். இப்பொழுது உள்ள சீர் திருத்த இயக்கமும் வலுத்துப்போனாலுங்கூட ஏன் வெகு காலங்கழித்த பின்னர் அப்போது தோன்றி தேசியத் தலைவரால் மறைந்துபோகக்கூடாது?

நவீன சீர்திருத்த் இயக்கத்தில் பிரியமில்லாத உதாஸீன ஸநாதனிகள் எக்காலத்திலும் இருக்கலாம். ஆதலால் சீர்திருத்தக்காரர்களுக்கும் ஸநாதனிகளுக்கும் விட்டுப்போகாமலிருக்க முடியாது என்பதை காந்தீஜீயிடம் தெரிவித்துக் கொள்ள எனக்குத் தைர்ய முண்டு.

காந்தீஜீ சீர்திருத்தக்காரர்களுக்கும் ஸநாதனிகளுக்கும் ஒரே சாஸ்திரமென்று கருதுகிறார். 8வது அறிக்கைபின்படி "கீதையின் முக்கிய கருத்துக்குப் பொருத்தமற்றதாக எது எங்கு அச்சிடப் பெற்றிருந்தாலும், அது எனக்குச் சாஸ்திரமாகாது" என்று இவருடைய தீர்மானமானதால் இவருக்குச் சாஸ்திரமும், அதன் அர்த்தமும்,வேறு ஸநாதனிகளுக்குவேறுதான். காந்தீஜீக்கு கீதை ஒன்றுதான் பரம சாஸ்திரம். கீதையிலுங்கூட சில பாகத்தை இவர் சாஸ்திரமாக ஒப்புக்கொள்ளமாட்டாரென்பது 'எது எங்கு" என்ற அவருடைய சப்தப் பிரயோகத்தால் தெரிகிறது. தாழ்ந்த வகுப்பினரையும், சீர்திருத்தக்காரர்களையும், ஒரு கோஷ்டியாக காந்தீஜீ வியவஹரிப்பதுபோல், ஸநாதனிகள் காந்திஜீயையும் சீர்திருத்தக்காரர்களையும், ஒரு கோஷ்டியாகச் சேர்த்து வியவஹரிப்பது நியாயத் தவறென்று அவரே கூறமாட்டார்.

காந்தீஜீ சீர்திருத்தக்கார கோஷ்டியில் சேர்ந்தவராயிருந்தாலும், இருக்கட்டும். புதிய ஒரு இயக்கத்தை ஸ்திரப்படுத்த உத்தேசிக்கிறவர் சாஸ்திரீய ஸித்தாந்த மென்னவென்று முதலில், தெரிந்துகொள்ள அவசியமேற்படுமேயானால், அதைக் குறித்து அகில இந்திய பண்டித! மஹாநாடு !ஒன்றுகூட்டி அதன் மூலமாக

வல்லவா தமது லக்ஷ்யத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இதன்றி நவீன விளம்பர முறைகளையும், பிரசார அனுகூலங்களையும், ஸஹாயமாக வைத்துக்கொண்டு ஸனாதனிகளின் சாஸ்திரார்த்தம் சரியல்ல, சீர்திருத்தக் காரர்களின் சாஸ்திரார்த்தந்தான் சரியென்று ஒரு தலையாக நிச்சயம் செய்துகொண்டு தம் உத்தேசத்தை அடைந்துவிட எத்தனிப்பது நியாயமா? இதனால், ஸனாதனிகளின் மனம், சங்கடத்திற்குள்ளாகாதா?

“ஆங்காங்கு ஸர்வஜனவாக்கொடுக்கலாமா?'' என்று காந்தீஜீ கேட்கிருர். இது நியாமல்ல. பண்டித ஜன வாக்கல்லவா பிரஸ்தாப விஷயத்தில் எடுக்கவேண்டும். தீண்டாமையும், ஆலயப்பிரவேசமும், சாஸ்திர வாயிலாகத் தீர்மானிக்கவேண்டிய விஷயமென்று காந்தீஜீயே ஒப்புக்கொண்டிருப்பதால், கோவில்களும், பொதுஸ்தலங்களும் யார்வசமிருக்கவேண்டுமென்பதைப் பற்றி பண்டித ஜன வாக்கு வேண்டுமேயொழிய ஸர்வஜன வாக்கு வேண்டியதில்லை. ஆகவே காந்தீஜீ பண்டித ஜன வாக்கெடுக்கலாமாவென்ருல் நியாயமாகும்.

ஒரு குறிப்பான திருத்தம் வல்லமையுடையதானுல், காலத்தின் தேவையை உத்தேசித்து வந்ததேயானுல், அதை உலகில் எந்த சக்தியும் தடுக்கமுடியாது என்று காந்தீஜீ கூறுகிருர்.

இது உண்மைதான். ஆனுல் அதை ஒன்றுகூடி வரவேற்கலாமா? இவருடைய கீதையே இவ்விஷயத்தில் இவருக்கு இடங்கொடுக்கவில்லையே. காலத்தையனுஸரித்த காரியங்களை தலைமை வஹித்து வரவேற்கலாகாது. அவையெல்லாவற்றையும் விவேகி உதாஸீனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். வரவேற்பதனுல் அனேக கெடுதல் உண்டு என்று தானே கீதை உபதேசிக்கின்றது.

न बुद्धि भेदं जनयेदज्ञानां कर्म सङ्गिनाम् ।

जोषयेत्सर्वकर्माणि विद्वान् युक्तस्समाचरन् ॥

என்று. ஆகவே தீண்டாமைவிலக்கு இயக்கத்திற்குத் தலைமையை வஹித்துக்கொண்டிருக்கும் நிலைமையில், காந்தீஜீயை வரவேற்கிறவாரகவே ஸனாதனிகள் கருதுகிருர்கள்.

காந்தீஜீ கடைசியாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கிருர்.

"நான் ராஜீய விஷயங்களென்றும், மத விஷயங்களென்றும், ஜனாசார விஷயங்களென்றும், வித்தியாஸங்கற்பிப்பதில்லை என்றும் இவைகளிலேதாவதொன்று தீர்ந்துவிடுமானால், மற்றவையின் முடிவு நெருங்கிவிடும்" என்று.

இந்த அபிப்பிராயம் சரியானதே. ராஜீயமும் மதமும் ஒன்றென்ற வாதம் திடமாயிருப்பது வாஸ்தவமானால், ஹிந்துமத அரசாங்க முறையை அமைத்தல் நியாயமாகும். அதனை கீதை ஒன்றால் மட்டிலும் அமைத்துக்கொள்ளமுடியாது. அதற்கு மனு யாக்ஞவல்க்யர்முதலியவரின்ஸ்மிருதிகளும்அவச்யம். அவற்றைக் காந்தீஜீப் பிரமாணமாக ஒத்துக்கொள்ளாதபோது ராஜீயத்திற்கும் மதத்திற்கும் வித்தியாஸம் எப்படி இல்லாமற் போகும். கீதை ஒன்றுதான் பிரமாணம் என்னும் வார்த்தையையாவது விட வேண்டும்.

சீர்திருத்தக்காரர்களுக்கு ஹிந்துமதம்வேறு ஸனாதனிகளுக்கு வேறு ஹிந்துமதம் என்றே இப்போதுள்ள இயக்கத்தால் ஸித்திக்கின்றது.

ஆகவே மதவிஷயத்தில் முதலில் முடிவு ஒன்று செய்து கொள்ள ஏதாவது ஸபாஸப் பிரயத்தினம் எடுத்துக் கொள்ள வேணும். அதற்கு பீடாதிபதிகள் பண்டிதர்கள் இவர்களுடைய ஸமாஜமொன்றுகூட்டுவதுதான் அத்யாவச்யமாகும். இதை எல்லாம் விட்டு உபவாஸமிருப்பதும், விளம்பரங்களை வெளியிடுவதும், சீர்திருத்தக்காரர்களை கிளப்புவதும், ராஜீயமும் மதமும் ஒன்றென்ற வாதத்திற்கு விரோதமுள்ளதாகவே தோன்றுகின்றது.

இந்த யோசனை ஆதியிலேயே இருக்குமானால், அதற்குறிய வழிகளை ஸனாதனிகளே காந்தீஜீக்கு எடுத்துக் காட்டியிருப்பார்கள். இப்போதாவது வீண் வேலையை விட்டு ஹிந்துமதப் பிரசார வேலையை நன்றாய் அறிந்து செய்ய முன் வருவாராக.

சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

பட்டினி கிடப்பேனென்று பிறரை நிர்ப்பந்திக்கலாமா?

பட்டினி கிடந்து ஒன்றை ஸாதிக்க எண்ணுவது சரியா, தவரு, என்பதைப்பற்றிச் சற்று சிந்திப்போம். "அந்நியரை ஹிம்ஸித்தால், தவறு; அந்நியருக்கு உணர்ச்சி வரும்படி, தான் துன்பம் ஸஹித்து, அவர்களை நேர்வழிக்குத் திருப்புவதற்கு, ஸத்யக்ரஹம் என்று பெயர். அதை ஆட்சேபித்தல் தகாது" என்று ஒரு கட்சி சொல்லுகிறார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன், ஒரு வியாஜத்தைக் குறிப்பிட்டு, அது நீங்கும் வரையில் 'நான் பட்டினி கிடப்பேன்; அதனால் இறப்பினும் இறப்பேன்" என்று காந்திஜி பிடிவாதம் சொன்னார், தீண்டாமையை ஒழிக்காவிட்டால், மறுபடியும் பட்டினி கிடப்பேன், என்று இப்போது காந்திஜி சொல்லுகிறார்.

எந்தக் காரணத்தாலும் தன் உயிரை மாய்த்துக்கொள்ளுதல் பாபம் என்று எல்லா மதங்களும் ஒப்புகின்றன. தன் உயிரைப் போக்க எத்தனிப்பது குற்றம் என்று சர்க்கார் சட்டமும் (Indian Penal Code) சொல்லுகிறது. இந்தமாதிரி காந்திஜியைப் போல் பெரியவர் செய்தாலும், அது சரியா, தவறு என்று விசாரிக்கவேண்டும். விசாரியாமல் ஒப்பவேண்டும், என்று காந்திஜியே சொல்லமாட்டார். இந்திரியங்களை அடக்கச் சிலர் உபவாஸம் செய்வதுண்டு. வேறு சிலர் வ்ரதமென்று நினைத்து பட்டினி கிடக்கிறார்கள். தான் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக ஒருவன் உணவை ஒழிப்பதுண்டு.

காந்திஜியின் காரியம், யோகாப்பியாஸம் செய்யப் புகுந்தவன் உண்பதை ஒடுக்கும் முறைபோல் ஆகாது. அன்னத்தை ஒடுக்கிப் புலன்கள் வெளிச்செல்லும் வேகத்தை அடக்கப் பார்க்கிறான் யோகி. காந்திஜியோ, தன் பட்டினியால், பிறருடைய கொள்கையை மாற்றப்பார்க்கிறார். சாஸ்த்ரத்தை நம்பி ஏகாதசியன்று பட்டினி கிடந்தால் புண்யம் உண்டு, ஸ்ரீ விஷ்ணு ப்ரீதி, என்று அநேகர் விருதம் கொள்கிறார்கள். சாஸ்த்ர ஒழுங்குகளை மாற்றும் கருத்துடன் காந்திஜி பட்டினி கிடப்பேன், என்கிறார். காந்திஜி பட்டினிகிடப்பது, அவர் செய்த பாபத்துக்குப் பிராயச்சித்தமாக, என்றும் அவர் சொல்லவில்லை.

நீண்டகாலமாய் காந்திஜியிடம் மஹாஜனங்கள் பற்றும், வாஞ்சையும், வைத்திருக்கிறார்கள். இப்போது எந்தப் பிடிவாதத்துக்காவது காந்திஜி பட்டினி கிடந்தால், அவர் உயிருக்கு ஹானி நேரிடுமோ என்று ஜனங்களுக்குத் தபிப்பு உண்டாகும். அதை ஆஸ்பதமாய்க்கொண்டு, தீண்டாதார்களுக்கு ஆலயப்ரவேசம் கிடைக்கும்படி, ஜாதிஹிந்துக்களை காந்திஜி நிர்ப்பந்திப்பது நியாயமாகாது.

S. M.

காலம்.

ஆகாயம் நித்யம்போல காலமும் ஆதியற்றது, அந்தமில்லாதது, நித்யமானது. காலத்தின் சாதாரண பாகங்களாகிய வருஷ மாதங்களுக்கு முன்னும் பின்னும் பல வருஷ மாதங்களின் தொடர்பை அறிகிறோம். 'இன்று' என்ற வார்த்தை உபயோகிக்கப்படுமானால் 'நேற்று, நாளை' என்ற வார்த்தைகளும் இருந்தே தீரவேண்டும். இவ்வாறே காலத்தின் நீண்ட (பெரிய) பாகமாகிய கல்பத்திற்கு முன்னும் பின்னும் பல கல்பங்கள் கழிந்திருப்பதையும் கழியப்படவேண்டியதையும் அங்கீகரிக்கிறோம். இதன் மூலம் காலம் நித்யம் என்பதையும் அதில் நிகழ்பெறும் உலக வாழ்க்கையும் அநாதியென்பதையும் உணர்கிறோம். காலம் எப்பொழுதும் அழிக்கப்பட முடியாததாய் தொடர்பாய் இருந்து வ்ருவதால் காலத்தையே கடவுள் என்றும் கூறலாம்.

உலகம் பதினாயிரக்கணக்கான சில வருஷங்களுக்கு முன்னர் தான் முதன் முதலாக உற்பத்திபெற்றது. அதற்குமுன் ஜீவர்களோ இன்று நாளை என்பதாய் கால அளவுகளோ, உலக வாழ்க்கைகளோ ஒன்றுமில்லை. சூர்ய சந்திரர்கள் இல்லாமலும் இரவு, பகல், பக்ஷம், மாதம், தக்ஷிணாயனம், உத்திராயணம், வருஷம் இவைகளில்லாமலும் உலகங்களோ பதார்த்தங்களோ ஒன்றுமேயில்லாமல் சொல்லமுடியாத ஓர் நிலையாயிருந்தது. உலகில் இப்பொழுது நாம் இருப்பதே முதலாவதாயும் கடைசியானதாகவுமுள்ள வாழ்க்கையாகும். இவ்வுலகம் ஒரு காலத்தில் நாசத்தை அடைய பிறகு ப்ரபஞ்ச வாழ்க்கைகளுக்கு இடமே

இராது என சில நவீன ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகின்றனர். இவர்களது அபிப்பிராயத்தில் முன் ஜன்மங்கள் வரும் ஜன்மங்கள் நாம் வஸிக்கும் பூமியைப் போன்ற கணக்கற்ற உலகங்கள் இவை சம்பந்தமாக ஆராய அதிக இடம் அளிக்கப்படவில்லை.

இந்த ஜன்மத்திற்கு காரணமாக முற்பிறப்பும் அதற்குக் காரணமாக தொடர்பாக பல முந்திய ஜனனங்களும் நமது நூல்களில் அங்கீகரிக்கப் படுகின்றன. இவ்விதமே மறு ஜன்மங்களுக்குக் காரணமாக இவ்வாழ்க்கை இருந்து வருகிறது. இந்த உலகம், இது பூமி; என்ற வ்யவஹாரங்களுக்கு ஆஸ்பதமாக இவ்வுலகம் இருந்துவருவதிலிருந்தே இதைப்போன்ற பல உலகங்களும் (கோளங்களும்) அநேக பூமிகளும் சூர்ய சந்திரர்களும் இருககவேண்டியதை நாம் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இதனால் பிரபஞ்சத்தின் அநாதித்தன்மை ஸித்திக்கிறது. அதனால் காலம் ஆதியந்தமற்றதுஎன்ற ஸித்தாந்தமே ஸரியாகும்.

இவ்வாறாக கால சக்ரத்தில் உழலும் நாம் என்று அலைவதை நிறுத்துவது? பிறப்பிறப்புகள் என்று ஒழியுமோ! நிம்மதியை அடைய சாதனம் யாது. இப்பொழுது ஒவ்வொரு ஜீவனும் அனுபவிக்கும் கஷ்டமான வாழ்க்கைகளுக்கு ஆறுதலாக அமைதியான வாழ்க்கைகள் நடத்தப்பட்டிருக்கின்றனவா? இனியும் நடத்துவது ஸாத்யமா! அவைகளுக்கு உபாயம் என்ன. பல கஷ்டங்களுடன் தவிர்க்கமுடியாபல் ஏற்றுக்கொள்ளும் இந்த வாழ்க்கையைவிட இன்னும் கொடூரமான வாழ்க்கையுமுண்டோ? இருக்குமானால் எந்தகர்மாக்களால் அத்தகைய பாபவாழ்க்கைகள் ஏற்படும்; முற்றிலும் சந்தோஷமான நிலையை எப்படி எட்டுவது என்ற பல பிரச்னைகளுக்கு ஒருவாறு உத்திரமளிப்பதாயும் பல காலங்களில் பிரபஞ்சத்தில் நடைபெற்றதாயும் நடைபெறப் போவதாயுமுள்ள பொதுவான சரித்ர வரலாறுகளையும் நடைபெறும் வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாகக் கூறுவோம்.

ஸத்வம், ரஜஸ், தமஸ், இம்மூன்று குணங்களும் ஒருகாலத்தில் 36000 கல்பங்கள் வரை ஒரே அளவாய் ஏற்றத் தாழ்ச்சியற்று இருந்துவந்தன. அதுவே பிரபஞ்சங்களின் லய காலம் என்று சொல்லப்படும். இந்த அவஸ்தையில் பிரகாசிப்பது நிர்குண ப்ரம்மம் மாத்திரமாம். இந் நிலையைப் பல நூலாளர்கள்

வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றனர். அந்த ஸமயத்தில் எல்லா சாாசரங்களும் அகில பிரபஞ்சங்களும் பஞ்சபூதங்களும் இன்னதென்றுவிவரிக்கக்கூடாதவரையில் ஸூக்ஷ்மமாக லயத்தை அடைந்திருந்தன. ஸத்வராஜஸ் தமோ குணங்களில் சிறிது மாறுதல் ஏற்பட, உலகங்கள் உண்டாகின்றன.

முதன்முதலாக அந்த மஹத்தத்வத்திலிருந்து மாயாசக்தியினால் அஹங்காரமும் மனமும் தோன்ற அதனின்று பஞ்ச பூதங்களும் பஞ்சேந்திரியங்களும் மற்றும் பிரபஞ்சங்களும் ஜீவாசிகளும் தோற்றத்தை அடைகின்றன. ஆகாயத்திலுள்ள அதி ஸூக்ஷ்மமான சப்த அலைகளினால் காற்று ஏற்பட, தடங்கலற்ற வெட்டவெளியில் வேகமாய் அடிக்கும் காற்றுகளின் உராசுதல்களின்மூலம் அக்னி உண்டாகிறது. பிருதிவிசம்பந்தமற்ற அக்னிஜ்வாலை காற்று ஆகாயங்களின் சேர்க்கையால் ஜலம் தோன்றமென்மேலும் உண்டாகிக்கொண்டிருக்கும். அக்னிக் காற்றுகளுடன் ஜலம் சேர்ந்து ப்ருதிவியும் உண்டாகிறது. பஞ்ச பூதங்கள் உண்டான உடனே சாாசரங்களாகிய உலக ஜீவாசிகள் ஸ்ருஷ்டிக்கப்படப் போதுமான ஸாமக்கிரியை ஸித்தமாக இருப்பதால் அடுத்த க்ஷணத்தில் எல்லா ஜீவாசி பேதங்களும் ஸ்ருஷ்டிக்சப்பட்டுவிடுகின்றன. இரண்டு மஹாப் பிரளய (லய) காலங்களின் இடைக்காலமாகிய ப்ரம்மாவின் ஆயுள்கொண்ட ஒரு மஹா கல்ப்பத்திற்குத் தேவையான 14, மனுக்கள் ரிஷிகள் சூரிய சந்திரர் முதலாய தேவர்கள் முதலானவர்கள் முன்னதாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த காலங்களில் அதிகாரத்தில் நியமிக்கப்படுகின்றனர். பூலோகத்தின் ஸ்ருஷ்டிக்கு முன்பாகவே ஸத்ய தபோ, ஞான, மஹர், ஸ்வர், புவர்லோகங்கள் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன. இவ்வாறாக ஸகல லோகங்களும் உத்பவிக்கின்றன.

வேலைசெய்பவர் ஓய்வெடுப்பதுபோலவே பிரபஞ்ச ஸ்திதி காலத்தில் அலையும் ஜீவர்கள் சிலகாலம் நிம்மதியாக இருக்கவே மஹா பிரளயமாகிய லய காலமும் இடையிடையே பல அவாந்தா லய காலங்களும் ஏற்பட்டுவருகின்றன. இவ்வாறு ஆத்மஸ்வரூபத்தில் பூர்ண ஓய்வெடுத்த பிறகு 'பிரபஞ்ச ஸ்திதிகாலமும் மறுபடி லயமும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றன.

காலத்தின் அதி சூக்ஷ்ம பாகமாக ஒருநாளுக்கு 30, முகூர்த்தங்கள், 1 முகூர்த்தம் 30 கலை, 1 கலை 30 காஷ்டை, ஒரு

காஷ்டை 15, கண்ணிமைப்பொழுதுகளாகவும், காலத்தை அளப்பதில் பெரிய பாகமாக கிருத, திரேதா, துவாபர, கலியுகங்கள் 1,மஹாயுகம், 71,மஹாயுகங்கள் 1,மனுவின் காலம், 14,மனுக்களின் காலம் 1,கல்பமாகவும், 2,கல்பங்கள் ப்ரம்மாவின் இரவு பகல் சேர்ந்த ஒருநாள். இவ்வாறு ப்ரம்மாவின் 100,வருடங்கள் அல்லது 311,040,000,000,000,வருடங்கள் ப்ரம்மாவின் ஆயுளாகவும் இதுவே பிரபஞ்சங்களின் ஜீவதசையாகவும் சொல்லப்படுகின்றன. இதற்குப் பிறகு 36000,கல்பம் லயகாலமாகும். இவ்வாறு பிரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி லய விவகாரமானது நடைபெறுகிறது. ஸாதாரணமாக ஒருநாள், நிமிஷ ஸெகண்டு கணக்கில் 86400, பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்க ஹிந்துமத நூல்களில் 405000,பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சங்களின் பெரிய கால அளவாக 31104000,கோடி வருஷங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனின்று ஹிந்துக்களின் கணிதமுறையின் சிறப்பும், சூக்ஷ்மகால அளவு குறிப்புகளும், உலகங்களின் உற்பத்தி முடிவைப்பற்றிய கணித முன்னேற்றமும், சரித்திரக் குறிப்புகளின் பூர்ணத் தன்மையும் தெளிவுபடும். இங்ஙனமிருக்க இந்தியாவின் மதநூல்களும் புராண இதிஹாஸ சரித்திரக்குறிப்புகளும் கிருஸ்துவுக்கு முன்பு சில ஆயிரக்கணக்கான வருஷங்களில்தான் முதலாவதாக எழுதப் பட்டனவென்றும், உலகில் செடி கொடி மிருகங்கள் இவைகள் உற்பத்தியான பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு பின்னர்தான் மனிதர்கள் தோன்றினார்கள் என்றும் நவீன ஆராய்ச்சியாளர் கூறுவது எவ்வளவு தவறானவை என்பது நன்கு புலப்படும். பஞ்சபூத ஸ்ருஷ்டிகளுக்கு அடுத்த க்ஷணத்தில் எல்லாவகை செடி கொடி பக்ஷி மிருகம் மனிதர் முதலாய பிராணிவர்க்கங்களும் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருப்பதாக முன்னமே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இதைப்பற்றி விரிவாக நாகரீகம் என்ற தலைப்பின்கீழ் ஓர் சமயம் ஆராய்வோம்.

மஹா கல்பத்தின் பாகங்களாகிய கல்பங்களிலும் கல்பத்தின் பாகங்களாகிய மனுக்களின் காலங்களிலும் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இந்த நான்கு முக்கிய பாகங்களே மீண்டும் சுற்றிச்சுற்றி வருவதாலும், உலகின் உற்பத்தியிலிருந்து

மீண்டும்முடிவுவரை வாழ்க்கையின்லக்ஷியங்களும்,எண்ணங்களும், நடத்தைகளும் இந்நான்கு யுகங்களில்தான் விசேஷமாக மாறுதல் அடைவதாலும் இந்நான்கு யுகங்களையும் முறையே அடுத்த வியாசங்களில் ஆராய்வோம்.

R. நடராஜன்.

மனுஸ்மிருதி அத்தியாயம் (3)

சில வசனங்கள்

1. எவ்வித ஆபத்திலும் பிராம்மண க்ஷத்திரியர்களுக்கு முதல் விவாஹ ஸ்திரீ சூத்திர ஜாதியாக ஒரு இதிஹாஸ புராணத்திலும் சொல்லப்படவில்லை.

2. முட்டாள்தனத்தால் சூத்ர ஸ்திரீயை விவாஹம் செய்யும் த்விஜன் குழந்தைகளோடு குடும்பத்தையே சூத்ரர்களாகச் செய்கிறான்.

3. சூத்ர ஸம்ஸர்க்கம் செய்யும் பிராம்மணன் நரகமடைவான். சூத்ரஸ்திரீயிடம் புத்திரன் உண்டானவனே பிராம்மண்யத்தையே இழப்பான்.

4. சூத்ரஸ்திரீ சேர்க்கை, மூச்சுக் காற்று, அவளிடம் புத்ரோத்பத்தி, இவைகளுள்ள பிராம்மணனுக்குப் பிராயச்சித்தமே இல்லை.

5. நான்கு வர்ணத்தார்களுக்கும் இந்த ஜன்மத்திலும் மறு ஜன்மத்திலும் ஹிதம், அஹிதம், இவைகளைக் கொடுக்கும் பின் சொல்லப்படும் எட்டுவித விவாஹங்களைச் சுருக்கமாய் சொல்லுகிறேன் கேளுங்கள்.

6. பிரம்மா, தேவர், ரிஷி, பிரஜாபதி, அஸுரன், கந்தர்வன், இராக்ஷஸன், பிசாசன், இவ்வெட்டு பெயர்களுக்கு ஏற்ற எட்டுவித விவாஹங்களுண்டு.

7. எந்த விவாஹம் எந்த வர்ணத்தாருக்குத் தர்மமானது, எதில் குணதோஷமுண்டு, எது சம்பந்தமான பிரஜோத்பத்தியில் நன்மை தீமையுண்டு என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

8. முதலில் சொல்லிய ஆறு விவாஹங்களும் கிரமப்படி பிராம்மணனுக்கு உசிதமானவை. கடைசியில் சொல்லிய நான்கு க்ஷத்ரியனுக்கு உசிதம். இராக்ஷஸ விவாஹத்தைத் தவிர அதே கடைசியில் சொல்லிய விவாஹங்கள் வைசிய, சூத்ராளுக்கும் உசிதமானவை.

9. முதலில் சொல்லிய நான்குவித விவாஹங்களும் பிராம்மணனுக்கு உசிதமென்றும், இராக்ஷஸ விவாஹம் க்ஷத்திரியனுக்கு உசிதம் என்றும், அஸுர விவாஹம் வைச்ய, சூத்ராளுக்கு உசிதமென்றும், சில ரிஷிகள் சொல்லுகிறார்கள்.

10. இந்த ஸ்மிருதியில் கடைசியில் சொல்லப்பட்ட ஐந்து வித விவாஹங்களில் மூன்று தர்மத்திற்கு விரோதமற்றவை. இரண்டு அதர்மமானவை. பிசாச, அஸுரவித விவாஹங்கள் ஒருக்காலும் செய்யக்கூடியவையல்ல.

R. ஸ்வாமினாதய்யர்.

॥ श्रीः ॥

जगद्गुरु श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वती

॥ नवरत्नमालिका ॥

पंकजोद्भवलोकमप्यतितुच्छ इत्यवधीरयन्
सांगवेदपुराणरक्षणबद्धकंकणहृद्विभुः ।
स्वीयपादसुभक्तिभाजमवत्विमं बुधसेवितः
चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीरितसद्गुरुः ॥१॥

चारुचंपकसूनकान्तिसमात्मकायरुचिं विभुं
ह्येकमेव च सत्यवस्तु विराजतीति समान् जनान् ।
एकदण्डलसत्करेण सुबोधयन्तममुं गुरुं
चन्द्रशेखरनामकेन्द्रसरस्तीरितमाश्रये ॥२॥

पण्डितव्रजभूषितात्मसमीपदेशविराजता
 दर्शनक्षणनिर्मलीकृतशिष्यलोकहृदाऽमुना ।
स्यां जगद्गुरुणा कदानुगृहीतएष कृपालुना
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीत्यभिधाभृता ॥३॥

गेयनैजविशुद्धवृत्तसमुद्भवामलकीर्तये
 धर्मपालनरक्तभूगतपार्वतीपतिमूर्तये ।
नित्यमस्तु नतिर्नमज्जनवारितोद्भवदार्तये
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीत्यभिधाय मे ॥४॥

शस्तवैभवमात्मनो भुवि च प्रकाशयितुं सती
 भारती गुरुरूपभागिहं राजतीति बुधैर्भृशम् ।
निश्चिता जगतीगुरोरमुमद्य कोऽस्त्यपरोऽवितुं
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीरितसद्गुरोः ॥५॥

कन्दमूलफलादिमात्रनिजोल्लसत्तनुपोषिणः
 काञ्चिपूर्वरभास्वरातुलशारदामठवासिनः ।
अर्थिसार्थसुरद्रुमस्य पदारविन्दमहं भजे
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीरितसद्गुरोः ॥६॥

विश्रुतामलकीर्तिहंसविभूषिताखिलभूतले
 स्वाश्रितातुलधीप्रदागमकोटिबोधनतत्परे ।
सन्ततं करुणारसार्द्रविलोचनेऽस्तु ममान्तरं
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीरितदेशिके ॥७॥

कृत्स्नवेदविबोधिताखिलधर्मपालनवांछया
 श्रीमदाद्यगुरूत्तमोऽभजदद्य भूमिमिमामिति ।
वैबुधव्रजसंस्तुताखिलवन्द्य पाहि दयानिधे
 चन्द्रशेखरनामकेन्द्रसरस्वतीरितसद्गुरो ॥८॥

तापं निवारयति यो यं स्तुवन्त्यपि च येनावितास्समजना
 यस्मै नमन्ति भुवि यस्मात् भजन्ति सुखदं चोपदेशमनिशम् ।

यस्याश्रयन्त्यमलपादौ च यत्र गुणवृन्दानि भान्ति सततं
लोकाभिवन्द्यजगदाचार्यवर्य तवशिष्यान् स रक्षतु भवान् ॥

श्लाघ्यवर्णविभूषितां विबुधस्तुतां गुणभास्वरां
साधुवृत्तयुतां लसन्नवरत्नकलसुमालिकाम् ।
पञ्चपूर्वनदीशशिष्य इमां सभक्ति जगद्गुरो
सोऽर्पयत्यधिकण्ठमद्य सुगृह्य धन्यमिमं कुरु ॥१०॥

॥ श्रीजगद्गुरुद्वादशमंजरी ॥

श्रितजनविरचिततोषं प्रशान्तवेषं भवाब्धिकृतशोषम् ।
मृडमिह धृतगुरुवेषं पालितसुवृषं नमामि भूभूषम् ॥१॥

राजति सत्पथदीपी भक्षितपापो हृतस्वजनतापः ।
गुरुवरकटाक्षभूपः विस्मृतकोपोऽविताऽऽगमद्वीपः ॥२॥

कलितेतरमतभंगं मृडकृतसंगं गुरुं जितानंगम् ।
गतितर्जितमातंगं सदयापांगं नमामि साष्टांगम् ॥३॥

अज्ञानतमोंबरमणि रागमरक्षामणि श्रितेन्द्रमणिः ।
अन्तर्दैशिकचिन्मणि रस्त्वन्तर्वाणिसार्थमूर्धमणिः ॥४॥

रचिताद्वैतसुरक्षः दमितनिजाक्षः कृताल्पमतिशिक्षः ।
विनमज्जनसुरवृक्ष स्सकृपाक्षोऽवतु गुरुस्सदा दक्षः ॥५॥

क्षीरांबुधिरिव दत्तसदमृतोऽमृतमिव सुतर्पितत्रिदशः ।
त्रिदश इवार्चितगिरिशः गिरिशइवाखिलनुतोगुरुर्जयति ॥

विधिरिववर्धितनिगमःनिगमवदखिलार्थजनकएषगुरुः ।
जनकइवालिप्तराज्यः राज्यमिवाखिलसुखप्रदोलसति ॥७॥

हर इवसत्यालंबोप्यनंगपुरप्यमेयशक्तिरपि ।
नविषमदृङ् नाविषादी नमार्गणीकृतरमाधिप स्सगुरुः ॥८॥

अनिलानधीननिजगतिरखिलजनेभ्यस्सदाभिमतवर्षी ।
श्री गुरुनामा राजति कश्चिन्मेघ स्सदाऽवनौ चित्रम् ॥९॥

सन्त्यक्तविषयजालं धृताक्षमालं त्रिपुण्ड्रयुतफालम् ।
लोकाभिपूज्यशीलं तर्जितकालं गुरुं भजे विमलम् ॥१०॥

अद्वैतलताकन्दं नतजनबृन्दं कृताश्रितानन्दम् ।
पदतर्जितारविन्दं द्विजजितकुन्दं गुरुं वरं वन्दे ॥११॥

अवनौ कृतावतारं सात्विकसारं नतार्तिहन्तारम् ।
श्रीगुर्वाख्यं सारं गिरिश मुदारं भजे नियन्तारम् ॥१२॥

पञ्चापगेशनीता सुवर्णसहितार्यवृत्तमहिताच ।
द्वादशमंजर्येषा भूषायै स्यात्गुरोःपदाब्जस्य ॥१३॥

ஸநாதன மதத்தின் விசேஷ தர்மங்களும், காங்கிரஸ் மூற்றுகையும்.

விசேஷ தர்மங்களின் படிகளாக ப்ராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்ரவர்ண தர்மங்களும், பிரும்மசரிய கிருஹஸ்தவானப்ரஸ்த ஸன்யாஸ தர்மங்களும் துலங்குகின்றன. பிரத்தியக்ஷமான இந்திரியங்களுக்குப் புலப்படாத பல ஜீவகோடிகளுக்கும் கூட பரஸ்பரம் ஒத்துழைப்பிருந்துவரும் ரீதியில் விசேஷ தர்மங்கள் உபயோகப்படுகின்றன. காம்ய தர்மங்களை நிஷ்காம்யமாகச் செய்தால் பாதகமில்லாத பரம சிரேயஸ்ஸும் இதரர்களுக்கு ஸகல ஸாதன ஸம்பத்துகளும் உண்டாகின்றன. பிற மதங்களில் கூறப்பட்டுள்ள விசேஷ தர்மங்கள் இந்திரியங்களுக்கெட்டாத பல நன்மைகளை விளைவிக்கின்றனவானாலும் எல்லா மதத்திற்கும் பொதுவான எல்லா ஸாமான்ய தர்மங்களும் நமது மத காம்ய தர்மங்களும் எந்த பலனை உண்டாக்கக்கூடுமோ, அவை தான் இவைகளால் ஸாத்யமானவை. மறு ஜன்மங்கள் பிறப்பிறப்புத் துன்பங்கள், இயற்கையான பசி தாகங்கள், தினசரி உழைப்புகள் இவை இருந்தேதீரும். சண்டைகள், மனக் கசப்பு,

கொள்கைகள் இவைகள்மாத்திரம் தவிர்க்கப்படலாம். முற்றிலும் ஆனந்தம் எட்டாது. பிறப்பிறப்பு ஒழியாது. சந்தோஷங்களுக்கிடையே சில கஷ்டங்களுமிருக்கும். இவைகளையும் ஒதுக்கி சுத்தமான ஆனந்தம் நிலவவேண்டுமானால், நிஷ்காம்யமாக ஸனாதனமத விசேஷ தர்மங்கள் ஸாமான்யதர்மங்களை ஒதுக்காமல் ஆசரிக்கப்படவேண்டும். ஸாமான்ய தர்மங்களுக்குப் பொதுவாக ஸாதன ஸாமக்கிரியைகள் தேவையில்லை. விசேஷ தர்மங்களை இவ்வாறு எளிதாக ஆசரித்துவிடமுடியாது. ஸாமான்ய தர்மங்களையே செய்யாதவர்களாயும், அல்லது பெற்று திருப்தியடையாதவர்களாயுமுள்ளவர்கள் ப்ரத்யக்ஷமானசுகத்தையுடனே கொடுக்காததும், பரோக்ஷமான சுகத்தை எதிர்பார்க்காமல் ஆசரிக்கப்படவேண்டியதுமான விசேஷ தர்ம விஷயங்களில், விசேஷ அறிவில்லாமலும், அதற்கவசியமென்று விதிக்கப்பட்ட யோக்யதைகளில்லாமலும், வர்ணாசிரம விதிகளுக்குமாறாகபிரவிர்த்தித்தல் தகாதகார்யம். உலக திருஷ்டியில் நாட்டமுடையவர்கள் தங்களுக்குள்ளாக போதிய முன்னேற்றமடையாத நிலையில், விசேஷ தர்மங்களைக் கைப்பற்றுவார்களானால் அவர்களுக்கு பாதகமேயுண்டாகும். எந்த லௌகிக பலனையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லையானால், இப்போதைய ஸந்தர்ப்பத்தில் விசேஷதர்மங்களைத் தாக்குவதோ, தர்மநிபந்தனைகளுக்கு மாறாக ஸ்வீகரிப்பது அல்லது மாற்றுவதோ, அனாவசியமாக ஆய்விடுகிறது. உலக க்ஷேமத்திற்கு காலத்திற்கேற்ற மாறுதல்கள் அவசியமென்று கூறினால், விதிகளை மீறி, மாற்றி, அல்லது சேர்த்து, அல்லது திருத்தி கைக்கொள்ளப்படும் விசேஷ தர்மங்களைவிட ஸாமான்ய தர்மங்களே மேலானவை. எவ்வளவுக்கெவ்வளவு குறைகள் அதிகப்பட்டுவிட்டனவோ அவ்வளவுக்கவ்வளவு அவரவரது நிலைமை திறமை வாஸனை யோக்யதை இவைகளையும் யோசித்து அனுஷ்டானங்கள் தீர்மானம் செய்யப்படவேண்டியிருக்கின்றன. இதனால் ஒரேவித அனுஷ்டானம் எல்லோருக்கும் பொருத்தமில்லை என்பது விளங்கும். ஒரு வியாதிஸ்தனுக்கு கொடுக்கப்படும் மருந்தை, 'மருந்து நன்மை தரும்' என்ற பொதுவான கொள்கையைக் கொண்டே ஸகல மானவர்களுக்கும் கொடுத்துவிடுவதானால், அந்த மருந்து இல்லாத சமயம் எவ்வளவு காலம் ஆரோக்யம் நீடிக்கக்கூடுமோ அதற்கு உலைவைத்ததாகிவிடும். இவ்வாறே விசேஷ தர்மானுஷ்

டான விஷயத்தில் தலைகால், தெரியாமல், மனச்சாட்சி என்றுகூறி, தங்கள் அபிப்ராயங்களை வேண்டாதவர்களிடையே திணிப்பவர்களும், தர்மத்தின்ஸ்வரூபம், தர்மசாஸ்திரங்களின் பொருள், அவைகளை விளக்கும் பலநூல்கள் இவைகளை முறையுடன் கற்று அனுஷ்டித்தால் ஏற்பட்ட அனுபவம், இவை யாவுமில்லாமல் உளறுபவர்கள் உண்மையிலேயே தங்கள் கேவலமான நிலையை அறியாத தற்கும் மிக வருந்தவேண்டும். இந்நிலையில் தர்மாதர்ம விசார விஷயத்தில் தங்கள் உலர்ந்த மூளையைச் செலுத்தி பிறருக்கு உபதேசிப்பதாயின் இவர்கள் கருத்தென்ன ? இருக்கும் தர்மத்தை ஒழிப்பது கருத்தாயின் நாம் சாஸ்திர சம்மதமான முறையில் எதிர்த்துப் போராடியே தீரவேண்டும். ராஜகோபாலசாரியார் முதலிய ராஜீய வாதிகளுக்கு தர்மத்தை பரப்புவது கருத்தாயின் அவர்கள் தர்ம நூல்களை கற்றவர்களல்ல, அதன் பொருள் அவர்களால் உணரப்படவில்லை. சாஸ்திர தர்மானுஷ்டானங்களும் அவர்களால் முறைப்படி ஆசரிக்கப்பட்டு வரவில்லை. சாஸ்திர சர்ச்சை விஷயத்தில் பிரவேசித்து அபிப்ராயம் தெரிவிக்கலாயக் கற்றவர்கள். சமூகப்புரட்சி, மதஸாங்கர்யம், அதர்மஸ்வீகாரம் முதலியவற்றை விரும்பும் இவர்கள் மனம்போனபடி அபிப்ராயங்களை வெளியிடுவது தேச விடுதலைக்கும் பிரபஞ்ச அமைதிக்கும் விரோதமானவை.

தங்கள் முறைகள் சரியானவை என்று அவர்கள் கருதலாம். ஆனால் மாறுன கருத்துடையவர்களுக்கும் அந்த சுதந்திரம்உண்டு. தற்காலத்தில் ராஜீய வாதிகளாலோ, சீர்திருத்தக்காரர்களாலோ ஆர்ய ஸமாஜத்தார் முதலியவர்களாலோ, எத்தகையபிரசாரங்கள் செய்யப்படுகின்றனவோ அவைகளை சாஸ்திரானுஷ்டான பார்களுக்குள் திணிக்கவேண்டாம். வேண்டுமானுல் ஆக்ஷேப அபிப்ராய பேதங்கள் சிறிதுமில்லாத தங்களுக்குள் இத்தகைய நிர்மாண வேலைகளை செய்துகொள்ளலாம். இதுகாறும் சாஸ்திராகமங்களைப் பிரமாணமாகக்கொண்டு நடைபெற்றுவரும்வழிபாடு முறைகளைத் தகர்ப்பது சகிக்கமுடியாததாகும்.

சாஸ்திர அறிவும் நம்பிக்கையும் இல்லாதவர்களுக்கு காந்தியின் வாக்கு ப்ரமாணமாக இருக்கலாம். சாஸ்திர நம்பிக்கை, அறிவு அனுஷ்டித்து வருதலாகிய ஆதாரம் இவை உள்ள ஸனுதனிகளுக்கும் அவர்கள் உகந்தபடி இருக்க உரிமையுண்டு.

அவசியமானால் விரோத அபிப்ராய முடையவர்கள் தங்களுக்குத்தோன்றிய சட்டங்களுடன் வேறு கோவில்களையும் வழிபாடு முறைகளையும் ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

காந்திதனக்குசாஸ்திரங்களில் அதிகபரிசயமில்லையென்பதை அங்கீகரிக்கிறார். இந்நிலையில் மதக்கிளர்ச்சியைத் தலைமைவகித்து நடத்தல் நீதியா ? தீண்டாதார் ஆலயபிரவேசவிஷயத்தில் பொது ஜன வாக்கெடுக்க சம்மதமா என்று கேட்கப்படுகிறது. வேத சாஸ்திர ஆகம ப்ரமாணங்களை நம்பாதவர்களும் மனச்சாட்சி என்று சொல்லி, தோன்றிய அபிப்ராயங்களை பிரசாரம் செய்பவர்களும் நிறைந்த தேசத்தில் மெஜாரிடியில் அதர்மம் அங்கீகரிக்கப் படுவதில் ஆக்ஷேபம் என்ன இருக்கிறது? மூடர்களிடையே தத்வ நூல்கள் ஆலோசனைக்கு கொண்டுவரப்படுவதுபோலவும், உயர்ந்த வைத்திய சிகித்ஸை பிரயோகங்கள் பரிசயமற்றபாமரர்களிடையே தீர்மானத்திற்கு கொண்டுவரப்படுவது போலவும், காந்தியின் அறிவிப்பு இருந்துவருகிறது. அவர் (காந்தி) உண்மையிலேயே தகுந்த பரிகாரத்தை விரும்புவாரானால், இந்தியாவில் உள்ள எல்லா ஹிந்துமத சாஸ்திராகம வேத நிபுணர்களுக்கும் அழைப்புகள் விடுத்து அபிப்ராயத்தை சேகரிப்பதே சரியான முறையாகும்,

மதவிஷயங்களில் ராஜீய வாதிகள் புகுந்திருப்பது அவர்கள் கோரும் விடுதலைக்கே விரோதமான பிரசாரமாகும். ஸ்வராஜ்ய முயற்சியில் வேற்றுமைகளை ஒழித்து ஐக்யத்துடன் ஆட்சி முறையை மாற்ற விரும்புவர்களது திருஷ்டியில் நாம் இதை யோசித்தாலும், தவறான இந்த ஐக்ய முயற்சியில் புதியதோர் பிளவை அதிகப்படுத்துகிறார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. சமூகப் பிளவுகளாக மாறிமாறி வந்துகொண்டிருந்த ஹிந்துமுஸ்லீம்,பிராமணர் பிராமணரல்லாதார், காங்கிரஸ்ஜஸ்டிஸ், முதலியன தீர்ந்து ஐக்யம் சித்திக்கும் இச்சமயத்தில் காங்கிரஸ் சார்பாகவே ஒற்றுமைக்கு விரோதமான கார்யங்கள் செய்யப் படுகின்றன.

ஒற்றுமை என்பது என்ன ? பாஷை, நடையுடை, ஆசாரங்கள், மதம் இவைகள் ஒழிவது பொருளா? இந்த ஒற்றுமையால் எவ்வித நன்மையும் உண்டாகமாட்டாது.

ஒரே மதத்திலிருப்பவர்களுக்குள் சச்சரவுகள் ஏற்படுவதில்லையா ? ஒரே வீட்டில் சேர்ந்துட்கார்ந்து சாப்பிடும் சகோதரர்

களுள் விபரீத சம்பவங்கள் நிகழவில்லையா? இவ்வாறே உயிர்த் தோழர்களாகக் கருதப்படுபவர்களுக்குள் அபிப்ராய பேதங் களும், சில சந்தர்ப்பங்களில் கொலைகளும், உண்டாகவில்லையா? ஆகவே நாட்டின் அமைதியின்மைக்கு,தனிப்பட்ட நபர், சமூஹம் அல்லது இதரதேசம் இவைகளின் பேராசையும் அதனை ஒட்டிய க்ரோதத்வேஷலோப மூலங்களான செய்கைகளே காரணங் களாகும். மதா னுஷ்டானங்களை ஒன்றுக்குதல், சமபந்திபோஜனம், கலப்புவிவாஹம், தீண்டாதார் ஆலயபிரவேசம் இவைகளால் சமூஹ ஒற்றுமையும் தேசவிடுதலையும் ஏற்பட்டுவிடாது. ஜாதிப்பிரி வினைகள், அநுஷ்டான வரைபரைகள், தொழில்கட்டுப்பாடுகள் இவைகளில்தான் தேசமுன்னேற்றமும் வாழ்க்கையின் உயர் லக்ஷியங்களும் ஸித்திக்கவேண்டும். த்வேஷம், கோபம், இருப் பதைக்கொண்டு திருப்தி அடையாமை,பிறர் பொருளில்மோஹம், இந்திரிய நிக்ரஹமின்மை இவைகள்தான் சந்துஷ்டிக்கு எதிரிடை யானவைகள்.

கோவில்கள் ஏகதேசமான மானுங்காணி சொத்தா? என்று ஓர் பிரபல ராஜீயவாதி கேட்டுக்கொண்டு வருகிறார். வேதா கம தர்மசாஸ்திர ப்ரமாணங்கள், அனுஷ்டானம், இதுகாறும் அனுபவித்து வந்துள்ள உரிமை, இவைகளையெல்லாம் உதறி, இஷ்டம்போல் பாத்யதையைத்திணிக்கும் மானுங்காணியா அது? என்று நாம் திரும்ப வினவுகிறோம்.

தேசமானது வறுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, பசிப்பிணியை நீக்க தேசீய நிர்மாணவேலைகள் அலக்ஷியம் செய் யப்படுகின்றன. இருந்துவரும் குழப்பங்களுடன் புதியதோர் கலகத்தை ஏற்பாடு செய்வது நேர்மையாகுமோ? அனாதா சிரமங் களை நிர்மாணம் செய்தல், கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து வேலையற்றவர்களுக்கு உதவிபுரிதல், முதலியனவிடுத்து கோவில் களை பொதுவாக்க முயற்சித்தல் எவ்வாறு பசிப்பிணியைப் போக்குமோ. மேல்நாட்டு ராஜீய வாதிகளைப்போல இந்திய ராஜீய வாதிகளும் உலக நாடகத்தில் முழுதும் ஈடுபட்டவர்களாய் பாரமார்த்திக பாதையை திரஸ்கரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். பேதமற்றுத்தொழும் உரிமையுண்டென்று சொல்லப்படும்போது கிருஸ்தவர்களும் முகம்மதியர்களும் இதே உரிமையை ஸ்தாபிக்க மாட்டார்களா? அதுவும் சுதந்தர ஸ்ராத்தைக் கண்டுபிடித்துள்ள

ராஜகோபாலாசாரியருக்கு ஆக்ஷேபமற்றதாக இருக்கலாம், நம் மதத்திலிருந்து இதரமதங்களுக்குப் போகும் காலமேயல்லாது இதரர் இதில் வரும் காலமல்ல வாதலால் பயப்பட வேண்டிய தில்லையென்று சமாதானம் கூறப்படலாம். நம் புனிதஸ்தலத்தை அசுத்தம் பண்ணும் நோக்கத்துடன் பீடி, சுருட்டு, ஜோடு முதலியவைகளுடனும் அல்லது தமாஷாக்காக(கெட்ட எண்ணங்களின்றி இபற்கையான உடைகளுடன்) அவர்கள் உள்ளே வரமாட்டார்களென்று எப்படிக் கூறமுடியும். ஜோடுகளையும் பீடிகளையும் சுத்தம்செய்து(Scientifically manufactured and daily washed) ஹிந்துக்களாலும் இதர மதஸ்தர்களாலும் தரிக்கப்பட்டு உள்ளேவரப்படுமானால் என்னபதில் கூறுவார்?

உண்மையிலேயே பல பானை கள்ளுக்குடங்களும், சாராயக் கடைகளும், வேசிகளின் லோகக்காட்சிகளும், நாயும் பன்றியும் கூட தெய்வ ஸன்னிதானத்தில் ஸமம் ஆதலால், அவைகளிடம் உள்ள கெடுதி, குறைவு, ஆசை இவைகளெல்லாம் ஸத்தாக மாறுவதற்காக கோவில்களில் இடமளிக்கப்படவேண்டுமென்று கூறினால், சுயேச்சையின் பதத்திற்கு வேறுவியாக்யானம் செய்ய முற்படுவாரோ ? கள்ளைக் குடித்துக்கொண்டும், வேசியுடன் கலவையிலிருந்துகொண்டும் அதே க்ஷணத்தில் கோவில்களில் ஈச்வரத்தியானத்தால் துன்மார்க்கங்களை நீக்கிக்கொள்ளசுதந்தரத்தைவிரும்புபவர்களை எவ்வாறு கட்டுப்படுத்தக்கூடும்? தர்ம சாஸ்திர ஆகம பிரமாணங்களுடன் ஒருவாறு செவ்வையாகநடத்தப்படும்கோவில்களில தீண்டாதார் பிரவேசமும் இவ்வாறே இருந்துவருகிறது. ஏன் தனிக்கோவில்களைக் கட்டி அவர்களை முன்னேற்றக்கூடாது? பெரிய கோவில்கள் தான் அவசியமோ? சிறிய கோவில்களாக இருந்தால் ஈச்வரஸான்னித்யம் இருக்கமாட்டாவோ? வேண்டுமானால் பெரியதாகவும் கோவில்களைக் கட்டிக்கொள்ளலாம். வைதிகர்கள் தொழும் கோவில்களில் தான் நாங்களும் தொழுவோம் என்னும் பிடிவாதமானது கடவுள் எங்கும் நிறைந்திருப்பதை நிராகரிப்பதாக ஆகவில்லையா ? மேலும் தனியாக அதிகக் கோவில்கள் நிர்மாணம் செய்யப்பட்டால், கோரப்படும் பக்தியும் பரிசுத்த வாழ்க்கையும் குறையுமென்பது ராஜீயவாதிகளின் எண்ணமா ?

(தொடரும்.) R. நடராஜன்.

பூனா ஒப்பந்தமும், ஆலயப்ரவேசமும்.

"ஜாதி ஹிந்துக்களே! பூனா ஒப்பந்தத்தால் நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால் அந்த்யஜர்களுக்கு ஆலயங்களைத் திறந்து விடுங்கள்", என்று காந்திஜி சொல்லுகிறார். இந்தப்படி வேண்டுதல் சரியா என்று விசாரிக்கவேண்டும்.

செப்டம்பர்மீ 19உ சில ஜாதி ப்ரமுகர்களும் அந்த்யஜர்களின் தலைவர்களும் பூனாவில் கூடினார்கள். 20உ காந்திஜி பட்டினி கிடக்க ஆரம்பித்தார். 17உ யன்று ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் விடுத்த அறிக்கையில், "காந்திஜியின் இப்போதைய தேகஸ்திதியையும், வயதையும் கவனித்தால், முன்னொரு சமயம் பட்டினி கிடந்து தாங்கின அளவு இப்போது தாங்க இயலாது; உடனே ஏதாவது பரிஹாரம் ஏற்படாமல், அவருக்கு ஹானி வருமாயின், உலகம் ஸஹிக்க முடியாத ஸம்பவங்கள் நேரிடக்கூடும்", என்று எல்லாருக்கும் திகில் கொடுக்கும்படி தெரிவித்தார். 24உ யன்று மற்றொரு அறிக்கையில், சாகும்தருவாயில் இருக்கும் மஹாத்மாஜி ஜனங்களை வேண்டிக்கொள்வதாகச் சொன்னார். 22உ பண்டிட் மாளவியாஜி, "இரண்டு நாள் பட்டினியால் காந்திஜி மிகவும் களைத்திருக்கிறார். இதுமாதிரி அதிகமாய்த் தாங்காது. ஆகையால் ஏதாவது முடிவு உடனே செய்யவேண்டும்" என்று கவலை பெருக்கும் எச்சரிக்கையிட்டார். பிறகு 24உயன்று பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது.

மேற்சொல்லியவிதம், கொட்டுவாயான நெருக்கடியில், பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் கையெழுத்திட்டவர்கள் ("இந்து" பேபரில்பேர்கள் குறித்திருக்கிறபடி)ஜாதிஹிந்துக்கள் நாலுபேர்:- பண்டிட் மாளவியாஜி, டாக்டர் ஸோலாங்கி, ஸர் டெஜ்பகதூர் ஸப்ரூ, ஸ்ரீமான் ஜயேகர்— இதரர்கள் ஐந்துபேர்:—டாக்டர் அம்பேத்கர், ராவ்பகதூர் ஸ்ரீனிவாஸன், ராவ்பகதூர் எம். ஸி. ராஜா, பி. பாலூ, ஸ்ரீமான் ராஜபோஜ்.

இவர்கள் கையெழுத்திட்டது எட்டு நிபந்தனைகள். அது ஹிந்து பத்திரிகையில்(25-9-32)வெளிவந்திருக்கிறது. அவைகளில் ஆலயப்ரவேசத்தைப்பற்றி ஒரு எழுத்துக்கூட இல்லை. இந்து மதத்தைச் சீர்திருத்த ப்ரவர்த்தித்திருப்பதாய் ஒரு அர்த்தமும் அதில் அடங்கியிருக்கவில்லை. அனுமானத்தால் கூட இவ்வித விஷயத்தை அதில் பூட்டும்படியாக இல்லை.

இந்தஸ்திதியில் காந்திஜி தீண்டாமை விஷயமாய்5-11-32உய அறிக்கையில், "பூனா ஒப்பந்தத்தில் கட்டுப்பட்ட ஜாதி ஹிந்துக்கள் தீண்டாதார்களைத் தங்கள் கோவில்களுக்குள்ளும், வீடுகளுக்குள்ளும், பள்ளிக்கூடங்களுக்குள்ளும் அழைத்துக்கொள்ள வேண்டும்", என்று என்ன ஆதாரத்தால் கேட்கிறார் என்றுவிளங்கவில்லை.

காந்திஜி பட்டினி தொடங்கினது, தனித்தொகுதிகளைத் தொலைப்பதற்காக. அது ராஜீய விஷயம். காந்திஜிக்கு மரணம் நேரிட்டால் உலகம் தாங்கமுடியாத அநர்த்தமுண்டாகும். என்று நடுக்கங்கொண்ட பீதியுடன், பூனுவில் கூடியிருந்த சிலபேர்கள் கையெழுத்திட்டார்கள். ஸ்வஸ்தமான நிலைமையில், மனதொப்பி ஏற்பட்ட ஒப்பந்தமல்ல பூனு உடன்படிக்கை. அவஸரத்திலும், அளவுகடந்த நிர்ப்பந்தத்திலும்,சம்பந்தப்பட்டபேர்களிடம் கலக்காமலும், தெளிவாக முன்னதிகாரம் பெறுமலும், அது ஏற்பட்டது. ஆனுலும், அதை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். காந்திஜியும், மாளவியாஜியும் ஒப்புயர்வற்ற ராஜீயத்தலைவர்கள். நெருக்கடியான ஸந்தர்ப்பங்களில், இந்து மஹா ஜனங்களின் ப்ரதிநிதிஸ்தானம் வஹித்து, அவர்களுக்காக அந்நியரிடம் முன்வார்த்தை கொடுத்துவிட்டுப், பின்னுல் இந்து மஹா ஜனங்களிடம் உறுதி பெற்றுக்கொள்ளக் கூடிய அவ்வளவு மேன்மை வாய்ந்தவர்கள், ஆனுல், அது ராஜிய விஷயத்தில் மட்டும்தான். மற்ற விஷயங்களுக்கல்ல. ஸ்ரீமான்கள் ஸப்ரூவும், ஜயேகரும், இந்து மதாசாரங்கள் ஜாதி வ்யவஸ்தைகளை மீறிப்போனவர்கள். டாக்டர் ஸோலாங்கியோ நாம் முன்னும்பின்னும் கேட்டறியாதவர். இந்த நாலு பேர்கள், மதவிஷயத்தைத்தொடக்கூடிய எந்த நிபந்தனையாலும் கோடிக்கணக்கான ஜாதி ஹிந்துக்களைக் கட்டுப்படுத்தும் படியாக கையெழுத்திட எவ்வித அதிகாரமும் கிடையாது. வேதங்கள், சாஸ்த்ரங்கள், மதாசாரங்கள், ஜாதி வ்யவஸ்தைகள், அனுதி காலம் தொட்டு வழங்கிவரும் நம்பிக்கைகள், நடவடிக்கைகள், எல்லாவற்றையும் பாதிக்கும்படியான ஒரு புது விஷயத்தைக் கிளப்பிவிட்டு, அதுவும் பூனு ஒப்பந்தத்தில் அடங்கியுள்ளது, என்று ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் தென்னிந்தியா ப்ரசாரப்பேச்சுகளில் வாய்விட்டுச்சொன்னுர். அவ்விதம் சொல்லுவதற்கு ஆதாரம் இல்லை. பூனு ஒப்பந்தத்தில் அது வெளிப்படையாகவுமில்லை; மறைந்தும் இல்லை. இதே மாதிரி காந்திஜி அவர்களும் கூட தம் முதலாவது அறிக்கையில் சொல்லியிருப்பது ஆச்சரியத்தையும், தாபத்தையும் உண்டுபண்ணுகிறது. காந்திஜியின் வாதம் தவறென்று, பூனு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ராவ்பஹதூர் ஆர். சீனிவாஸன் சொல்லாலேயே வெளியாகிறது. 20—11—32ல் திருச்சினுப்பள்ளியில் சீனிவாஸன் பேசியதில், "பூனு ஒப்பந்தத்துக்குப் பிறகு, ஆலயப்ரவேச சீர்திருத்தம் தீர்மானிக்கப்பட்டது." என்று சொல்லியிருக்கிறுர்.

("ஹிந்து" 21—11—32 பக்கம் 15) S. M.

மதிப்புரை.

ஸ்ரீ வாமன புராணம்.

வடமொழியிலுள்ள, இவ்வுத்தமபுராணம், இதுவரையில் தென்மொழியில் ஒருவராலும் மொழிபெயர்க்கப் படவில்லை. ஆஸ்திகபாரதமக்களின் பாக்ய விசேஷத்தால், ஸாஹித்ய வாங்முகபூஷணம், ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் இதனை இனிய தமிழ் நடையில் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் வாமனாவதார மஹிமை வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருப்பதுடன் அரிய பல ஹிந்துமத தர்மங்களும், விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. நமது நாட்டில் கார்த்திகை உத்ஸவம் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்ற விஷயம் யாவருக்குந்தெரியும். அதற்கு வாமனர் பலிசக்கிரவர்த்திக்குச்செய்த அனுக்கிரஹந்தான் காரணம். மஹாபலியின் பெயரால் நடத்தப்படும், கார்த்திகை தீபாவளி மஹோத்ஸவத்திற்கு இப்புராணந்தான் ஆதாரமென்பது இதனை வாசித்தால் நன்கு புலனாகும். 95 அத்தியாயங்கொண்ட இப்புராணத்தை 108 பக்கங்களில், அணுவளவேனும் ஒரு விஷயமும் விடாமல், ஸங்கிரஹஞ்செய்த சர்மா அவர்களின் புத்தி சாமர்த்தியம் போற்றத்தக்கதே?

ஆஸ்திகர்களே! அபூர்வமாயுள்ள இக்கிரந்தத்தை வாசித்துப் பார்ப்பீர்களானால், இதைப்பற்றிய என் வசனமெல்லாம், மிகக் குறைவாகவே தோன்றுமென்பதில் ஐயமில்லை, சர்மா அவர்களியற்றிய நூல் பலவுண்டு, அவை ஒவ்வொன்றுமே ஒவ்வொரு ஆஸ்திகருக்கும் அவச்யமாகும். இதனால் புராணப் பிரவசனம் பண்ணுகின்ற பண்டிதர்களுக்கும் உயர்ந்த உபகாரமுண்டு. யாவரும் எளிதில் பெரும்பொருட்டே இதன் விலை 0—6—0வாக குறைக்கப்பட்டிருக்கின்றது. 0—7=0 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும். 7-அணாவை ஒரு சிலவாக பொருட்படுத்தாமல் வாமனபுராணத்தை முதலில் வா கி வாசித்துப்பாருங்கள். பிறகு சர்மாவின் மற்றப் பிரசுரங்களையும், வாங்கி வாசிக்கும்படி உங்களுக்கே தோன்றிவிடும். அதன் பிறகு உங்கள் நண்பர்களுக்கும் உபதேசஞ்செய்ய முற்படுவீர்கள்.

இந்த தர்மவிஷயத்தில், உங்கள் பணம் கொஞ்சமாவது சேர்வது உங்கள் பாக்கியமே.

இது கிடைக்குமிடம்: — அமரகலா விலாஸினீஸபா.

154-தம்புச்செட்டித் தெரு, சென்னை.